# திட்டமிடாத தொடர்புகள்

திட்டமிடாத தொடர்புகள் என்பவர்கள் COVID-19 ஆல் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒரே சமயத்தில் (விருப்பமான இடத்தில்) ஒரே இடத்தில் இருந்தவர்களை குறிக்கும்.

**திட்டமிடாத தொடர்புகள் COVID-19 ஆல் பாதிக்கப்படும் குறைந்த ஆபத்தை கொண்டுள்ளனர்.** திட்டமிடாத தொடர்புகளுக்கான தகவல் மற்றும் ஆலோசனை சுகாதார அமைச்சகத்தின் வலைதளத்தில் தரப்பட்டுள்ளன தவிர இவை ஊடகங்கள் மற்றும் NZ COVID Tracer செயலி எச்சரிக்கைகள் மூலம் அறிவிக்கப்படலாம்.

## வீட்டிலேயே தங்கி சோதனை செய்து கொள்ளவேண்டுமா?

*சோதனைகளுக்கு கட்டணமில்லை*

**இல்லை**

**உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டாலொழிய.**

உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் ஹெல்த்லைனை அழைக்கவும், ஒரு சோதனை செய்துக்கொள்ள வேண்டும் மற்றும் வீட்டிலேயே தங்குங்கள்:

- உங்களுக்கு ஒரு எதிர்மறையான முடிவு வரும்வரை **மற்றும்**
- அறிகுறிகள் நின்ற பிறகு 24 மணிநேரம் வரை
- சாத்தியமென்றால் உங்கள் வீட்டில் மற்றவர்களிடமிருந்து விலகியிருங்கள்.

சோதனை மைய தகவலுக்கு ஹெல்த்லைன் எண் **(0800 358 5453)** ஐ அழைக்கவும் அல்லது healthpoint.co.nz/covid-19/ க்கு வருகை தரவும்

COVID-19 இன் காரணமாக வீட்டிலிருக்க தேவைப்படும் நபர்களுக்கு நிதி ஆதரவு கிடைக்கிறது.

**எதிர்மறை** சோதனை: உங்களுக்கு COVID-19 **இல்லை**
**நேர்மறை** சோதனை: உங்களுக்கு COVID-19 **உள்ளது** (பொது சுகாதாரத்துறை உங்களை அழைக்கும்).

## அறிகுறிகளை கவனிக்க வேண்டுமா?

**ஆம்**

**COVID-19 பாதித்த நபருக்கு அருகில் நீங்கள் கடைசியாக இருந்த நாளுக்கு பின்னர் 14 நாட்களுக்கு.**

**COVID-19 அறிகுறிகள் பின்வரும் ஒன்றோ அல்லது மேற்பட்ட அறிகுறிகளை உள்ளடக்கலாம்:** *புதிய அல்லது மோசமடையும் இருமல், காய்ச்சல், மூச்சிறைப்பு, தொண்டை எரிச்சல், மூக்கொழுகுதல், தற்காலிக வாசனை/சுவை உணர்வு இழப்பு.*

சில நபர்களுக்கு பின்வரும் அறிகுறிகளும் ஏற்படலாம்: *வயிற்றுப்போக்கு, தலைவலி, தசை வலி, குமட்டல், குழப்பம், எரிச்சல்.*

**உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால்:**

- வீட்டிலேயே இருங்கள்
- ஹெல்த்லைனை அழைக்கவும் **(0800 358 5453)**
- சோதனை செய்துகொள்ளுங்கள்.

## உங்களுடன் வசிக்கும் நபர்கள் ஏதேனும் செய்ய வேண்டுமா?

**இல்லை**

**அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டாலொழிய.**

எவருக்கேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் அவர்கள் ஹெல்த்லைனை அழைத்து ஒரு சோதனை செய்துகொள்ள வேண்டும் மற்றும், பின்வரும் காலம்வரை வீட்டில் தங்கவேண்டும்:

- அவர்களுக்கு எதிர்மறை முடிவு கிடைக்கும் வரை, **மற்றும்**
- அவர்கள் அறிகுறிகள் மறைந்த பிறகு 24 மணிநேரம் வரை

அறிகுறிகள் கொண்ட நபர் உடன் வசிப்பவர்களிடமிருந்து கூடுமானவரை விலகியிருக்க வேண்டும்.

**உங்களுக்கு ஒரு எதிர்மறையான முடிவு வரும்வரை வீட்டிலேயே தங்குங்கள். உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் வீட்டிலேயே தங்குங்கள். நீங்கள் பூரண குணமடையும் வரை வீட்டிலேயே தங்குங்கள்.**

உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் அல்லது ஆலோசனை தேவைப்பட்டால் ஹெல்த்லைனை அழைக்கவும்: தொலைபேசி எண் **0800 358 5453** -க்கு டயல் செய்யவும். உங்களுக்கு சுவாச பிரச்சினை ஏற்பட்டால், ஒரு ஆம்புலன்சுக்கு அழையுங்கள்: தொலைபேசி எண் **111** –க்கு டயல் செய்யவும்.